


14.9.2024

தலைப்புச் செய்திகள்

1. ஜம்மு காஷ்மீரின் டோடா மாவட்டத்தில் பிஜேபியின் தேர்தல் பிரச்சார பேரணியில் கட்சியின் மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திரமோடி இன்று பிற்பகல் பங்கேற்கிறார்.

2. ஹிந்தி மொழி உட்பட பிராந்திய மொழிகளை வலுப்படுத்த நாட்டு மக்கள் இணைந்து செயலாற்ற அமைச்சர் திரு.அமித்ஷா அழைப்பு விடுத்துள்ளார்.

3. தமிழகத்தில் 7 ஆயிரத்து 616 கோடி ரூபாய் மதிப்பில் 19 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்-2 முதல்நிலை தேர்வை 7 லட்சத்திற்கும் அதிகமானோர் இன்று எழுதினர்.

5. ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆடவர் ஹாக்கி கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா பாகிஸ்தானை தற்போது எதிர்கொண்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

தேர்தல்

ஜம்மு காஷ்மீரில் வரும் 18ஆம் தேதி 24 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடைபெறும் முதல்கட்ட வாக்குப்பதிவிற்கான பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

பிரச்சாரம் முடிவடைய 3 நாட்கள் எஞ்சியுள்ள நிலையில் அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி ஜம்மு காஷ்மீரின் டோடா மாவட்டத்தில் இன்று தேர்தல் பேரணியில் பங்கேற்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

காங்கிரஸ் மற்றும் தேசிய மாநாட்டு கட்சியினரும் தத்தம் கட்சிகளை சேர்ந்த வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்குகளை திரட்டுகின்றனர்.

இந்நிலையில் ஹரியானாவில் வரும் 5ஆம் தேதி 90 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக நடைபெறும் தேர்தலுக்கான பிரச்சாரத்தை பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திரமோடி குருஷேத்ராவில் இன்று பிற்பகல் தொடங்கிவைக்கிறார்.

ஹரியானா மற்றும் ஜம்முகாஷ்மீர் சட்டப்பேரவை தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 8 ஆம் தேதி எண்ணப்படுகின்றன.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

பிரதமர் வந்தேபாரத்

பிரதமர் திரு.நரேந்திரமோடி 3 நாள் பயணமாக ஜார்கண்ட், ஒடிசா, குஜராத் மாநிலங்களுக்கு நாளை புறப்படுகிறார்.

ஜார்கண்டில் டாட்டா நகர், பாட்னா வந்தேபாரத் ரயில் உட்பட 6 புதிய வந்தேபாரத் ரயில் சேவைகளை நாளை பிரதமர் தொடங்கிவைக்கிறார்.

இந்நிகழ்வின்போது 660 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு ரயில் திட்டங்களை நாட்டிற்கு அவர் அர்ப்பணிக்கிறார்.

பிரதமரின் ஆவாஸ் யோஜனா வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 20 ஆயிரம் பயனாளிகளுக்கு அனுமதி ஆணைகளையும் அவர் வழங்குகிறார்.

குஜராத், காந்திநகரில் நாளை மறுநாள் பிரதமரின் சூரிய மின்சக்தி திட்ட பயனாளிகளுடன் கலந்துரையாடும் பிரதமர் 4ஆவது சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீட்டாளர்கள் மாநாடு மற்றும் கண்காட்சியையும் தொடங்கிவைக்கிறார்.

தமது குஜராத் பயணத்தின் ஒருபகுதியாக அஹமதாபாத்தில் 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதுடன் புதிய திட்டங்களையும் பிரதமர் தொடங்கிவைக்கிறார்.

தொடர்ந்து ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் வரும் செவ்வாய்கிழமை 3 ஆயிரத்து 800 கோடி ரூபாய்க்கும் மேலான திட்டங்களையும் பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஹிந்தி மொழி - அமித்ஷா

இந்திய மொழிகள் அனைத்தும் நாட்டின் பாரம்பரிய கலாச்சாரத்தையும், பெருமையையும் பறைசாற்றுவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

ஹிந்தி மொழியின் 75ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி புதுதில்லியில் நடைபெறும் வைர விழா கொண்டாட்ட நிகழ்வில் உரையாற்றிய அவர், மொழிகளை செறிவூட்டுவதன் மூலம் நாடு வளர்ச்சி பெறும் என்று சுட்டிக்காட்டினார்.

ஹிந்தி மொழி மற்றும் பிராந்திய மொழிகளுக்கு இடையே எவ்வித போட்டியும் இல்லை என்று எடுத்துரைத்த அவர் அனைத்து உள்ளூர் மொழிகளுக்கும் தோழமை மொழியாக ஹிந்தி திகழ்கிறது என்றார்.

நாட்டில் உள்ள அனைத்து மொழிகளும் ஹிந்தி மொழியையும்,

ஹிந்தி மொழி அனைத்து மொழிகளையும் வலுப்படுத்துவதாகவும் எடுத்துரைத்தார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் கடந்த 10 ஆண்டுகளாக ஹிந்தி மற்றும் பிராந்திய மொழிகளுக்கு வழங்கப்பட்ட உத்வேகத்தை எடுத்துரைத்த அவர் ஹிந்தி மொழியின் முக்கியத்துவத்தை பல்வேறு சர்வதேச தளங்களில் பிரதமர் முன்னெடுத்துச்சென்றிருப்பதை சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இந்திய மொழிகளின் மீதான தமது பற்றை பிரதமர் வெளிப்படுத்தியிருப்பதாகவும் திரு.அமித்ஷா எடுத்துரைத்தார்.

8 ஆவது அட்டவணை பட்டியலில் இடம்பெற்றுள்ள ஹிந்தி உட்பட அனைத்து மொழிகளின் மொழியாக்கம் தொடர்பான இணையதளம் விரைவில் தொடங்கப்படும் என்றார்.

செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி இதில் வெளியாகும் கடிதங்கள், உரைகள் போன்றவை குறைந்த நேரத்திலே மொழியாக்கம் செய்யப்படும் என்று குறிப்பிட்டார்.

ஹிந்தி மொழி உட்பட பிராந்திய மொழிகளை வலுப்படுத்த நாட்டு மக்கள் இணைந்து செயலாற்ற அமைச்சர் திரு.அமித்ஷா அழைப்பு விடுத்துள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் ஆகியோரும் ஹிந்தி மொழி வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூ

ராம்நாத் தாக்கூர்

உணவு பாதுகாப்பையும், ஊட்டசத்தையும் உறுதி செய்யும் வகையில் உணவு அடிப்படையிலான வலைதள நிகழ்ச்சிகளை இந்தியா செயல்படுத்துவதாக மத்திய வேளாண் இணை அமைச்சர் திரு.ராம்நாத் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

பிரேசில் நாட்டில் ஜி-20 வேளாண் அமைச்சர்கள் கூட்டத்தில் இன்று உரையாற்றிய அமைச்சர், வேளாண் வளர்ச்சிக்கு இந்தியா உயர் முன்னுரிமை வழங்குவதாக எடுத்துரைத்தார்.

உற்பத்தியோடு பொருளாதாரம் சமூக வளர்ச்சி, சுற்றுசூழல், நிலைத்தன்மை, விவசாயிகளின் வளம், வளர்ச்சிக்கான விரிவான தொலைநோக்கு திட்டம் போன்றவற்றிற்கு தனி கவனம் செலுத்தப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

வளமான மற்றும் நிலையான எதிர்காலத்திற்கு வேளாண் நடைமுறைகளை மீட்டெடுத்து பரவலாக்க இந்தியா உறுதிபூண்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூ

பியூஷ்கோயல்

பாஸ்மதி அரிசிக்கான குறைந்தபட்ச ஏற்றுமதி கட்டணம் முற்றிலும் விலக்கிகொள்ளப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

உள்நாட்டு தேவைக்கு போதிய அளவு அரிசி கையிருப்பில் உள்ளதை அடுத்து இந்நடவடிக்கை.

சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஒரு மெட்ரிக் டன் பாஸ்மதி அரிசிக்கான குறைந்த பட்ச ஏற்றுமதி கட்டணம் ஆயிரத்து 200 டாலராக தற்காலிகமாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இது கடந்த அக்டோபர் மாதம் தொள்ளாயிரத்து 50 டாலராக குறைக்கப்பட்டது.

இந்நிலையில் பாஸ்மதி அரிசி கையிருப்பில் அதிக அளவில் உள்ளதால் குறைந்த பட்ச ஏற்றுமதி கட்டணம் முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதியை அதிகரித்து விவசாயிகளின் வருவாயை உயர்த்த இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர்

தமிழகத்தில் 7 ஆயிரத்து 616 கோடி ரூபாய் மதிப்பில் 19 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் தமது அரசு முறை பயணத்தை முடித்துக்கொண்டு சென்னை திரும்பிய அவர், இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில், இம்முதலீடுகள் திருச்சி, மதுரை, கோவை, கிருஷ்ணகிரி, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் என்றார்.

மேலும் பல நிறுவனங்கள் வரும் காலங்களில் தமிழகத்திற்கு வர விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது வந்துள்ள 100 சதவிகித முதலீடுகளும் நிறைவேற்றப்படும் என்றும், அதற்கான வேலை வாய்ப்புகள் விரைவாக உருவாக்கப்படும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

தமது 14 நாள் அமெரிக்க பயணம் பயனுள்ளதாக இருந்ததாகவும், 11 ஆயிரத்து 516 பேருக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

வாய்ஸ்

கேள்வி ஒன்றிற்கு பதில் அளித்த அவர் தமிழ்நாட்டில் மெட்ரோ ரயில் திட்டத்திற்கும், பள்ளி கல்வி துறைக்காகவும் பிரதமரிடம் நிதி கோரப்படும் என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர் வாழ்த்து

ஓணம் பண்டிகை நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி மலையாள மொழி பேசும் மக்களுக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமத்துவம், சகோதரத்துவத்தை வலியுறுத்தும் இந்நாளில் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ அவர் வாழ்த்தியுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர் காவல் பதக்கம்

தமிழ்நாட்டில் காவல்துறை மற்றும் சீருடை பணியாளர்கள் 129 பேருக்கு காவல் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் நாளை கொண்டாடப்படும் நிலையில், காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, ஊர்க்காவல் படை மற்றும் விரல்ரேகை பிரிவுகளில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

வுளேஉ

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்-2 முதல்நிலை தேர்வு மாநிலம் முழுவதும் இன்று நடைபெற்றது.

சார்பதிவாளர், உதவி ஆய்வாளர், துணை வணிகவரி அலுவலர் உள்ளிட்ட 2 ஆயிரத்து 327 காலி பணியிடங்களுக்கு நடைபெறும் இத்தேர்வில் 7 லட்சத்திற்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

காலை ஒன்பதரை மணிக்கு தொடங்கிய இத்தேர்வு 12.30 மணிவரை 2 ஆயிரத்து 763 மையங்களில் நடைபெற்றது.

திருச்சி, பெரம்பலூர் நாமக்கல் ராணிப்பேட்டை திருப்பத்தூர் கரூர் திருவாரூர் ராமநாதபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் தேர்வு மையங்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன.

பிற்பகலும் குரூப் 2 தேர்வு தொடர்ந்து நடைபெறுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

லோக் அதாலத்

தேசிய மக்கள் நீதிமன்றம் லோக் அதாலத் தமிழகத்தில் இன்று நடைபெறுகிறது.

காசோலை மோசடி, ஜீவனாம்சம், குடும்ப நல வழக்குகள், வாகன விபத்து இழப்பீடு உள்ளிட்ட பல்வேறு வழக்குகளுக்கு சமரச முறையில் இதில் தீர்வு எட்டப்பட்டு வருகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல், ராசிபுரம், பரமத்தி, திருச்செங்கோடு, சேந்தமங்கலம், குமாரபாளையம் நீதிமன்றங்களில் நூற்றுக்கணக்கான வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டது.

விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு 19 கோடிரூபாய் இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டதாக மாவட்ட முதன்மை நீதிபதி பூர்ணிமா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

……… வாய்ஸ் …………

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஊர்வலம்

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் இன்று விநாயகர் சிலை ஊர்வலம் நடைபெற உள்ள நிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அங்கு பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

திண்டுக்கல் மலர் சந்தை

ஓணம் பண்டிகை மற்றும் ஆவணி மாத கடைசி முகூர்த்தத்தை ஒட்டி, திண்டுக்கல் பூ சந்தையில் பூக்களின் விலை உயர்ந்துள்ளது.

மல்லிகை பூ ஆயிரத்து 700 ரூபாய்க்கும், கனகாம்பரம் ஆயிரத்து 500 ரூபாய்க்கும் விற்பனையாவதால் பூ விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

வைகை அணை

வைகை அணையிலிருந்து பாசனத்திற்காக நாளைமுதல் தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

71 அடி கொள்ளளவு கொண்ட அணையின் நீர்மட்டம் தற்போது 61 அடியை எட்டிய நிலையில் நாளைமுதல் 45 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படுவதால் மதுரை, மேலூர், திருமங்கலம் வட்டத்தில் உள்ள ஒரு லட்சத்து 5 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஹாக்கி

சீனா ர்ரடரடுெரசை-இல் நடைபெறும் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆடவர் ஹாக்கி போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தானை தற்போது எதிர்கொண்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது